செய்தி வெளியீடு எண்–559 நாள்–29.8.2009

**212 கால்நடை ஆய்வாளர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்**

* * * * * * * * *

இன்று (29.8.2009) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 212 கால்நடை ஆய்வாளர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:

கடந்த 2001 முதல் 2006 வரை நடைபெற்ற ஆட்சியில் கால்நடைத்துறையில், கால்நடை உதவி மருத்துவர் பதவிகளோ, கால்நடை ஆய்வாளர் பதவிகளோ, கால்நடை பராமரிப்பு உதவியாளர்களோ நியமனம் செய்யப்படவே இல்லை. 2006ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் ஆட்சி பொறுப்பிற்கு வந்த பிறகு, கால்நடைத் துறையில் 455 கால்நடை உதவி மருத்துவர் பதவிகளும், 38 ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நிரப்பப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் மேலும் 54 கால்நடை உதவி மருத்துவர்களும், 444 இளநிலை கால்நடை உதவி மருத்துவர்களும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பப்படவுள்ளன.

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உத்தரவிற்கிணங்க 425 கால்நடை ஆய்வாளர்களை தகுதி அடிப்படையில் தேர்வு செய்து புதுக்கோட்டை, ஒரத்தநாடு, ஒசூர், முகுந்தராயபுரம் ஆகிய இடங்களில் உள்ள கால்நடைப் பண்ணைகளில் 11 மாத பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சி முடித்த 174 நபர்களுக்கு கடந்த ஜுலை 2009ல் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. தற்போது, பயிற்சி முடித்துள்ள 212 நபர்களுக்கு இன்று (29.8.2009) பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, கால்நடைத்துறை செயலாளர் திரு. சி.முத்துக்குமாரசாமி, ஆணையர் திரு. மு.மாலிக்பெரோஸ்கான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.